## திராவிட மாடல் அரசு மகளிருக்குத் துணை நிற்பது போல்

# மகளிரும் இந்த அரசிற்குத் துணையாக நில்லுங்கள்!

### ஆர்.கே.நகர் அச்சீவர்ஸ் அகாடமி திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, ஜூலை 7 -

ஆர்.கே.நகர் அச்சீவர்ஸ் அகாடமி திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

நான் வெளியூர் செல்லும்போதெல்லாம் எனக்கு தலைவரின் அறிவுரை ஒன்று உணடு. 'தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் அங்கு இருக்கின்ற மகளிர் சுயஉதவிக்குழு சகோதரிகளை வரச் சொல்லி, அவர்களுடன் பேசி அவர்களின் குறைகளைக் கேட்டு, அவர்களுக்கு நாம் வேறு என்ன செய்ய முடியும்?' என்பதுதான் முதலமைச்சரின் உத்தரவு.

**சிறப்பான பணி**

அதன்படி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை எங்கு சென்றாலும், அங்கு இருக்கின்ற மகளிர் சுயஉதவிக்குழுச் சகோதரிகளை அழைத்து, அவர்களின் தேவைகளை உடனுக்குடன் நம் முதலமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்யச் சொல்லி இருக்கிறார். அந்த வகையில், இன்றைக்கு ஆர்.கே.நகருக்கு வந்து உங்களை எல்லாம் சந்திக்கின்ற, இந்த மையத்தைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பை அளித்த உங்களின் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினர். எப்போது என்னைப் பார்க்க வந்தாலும், தனக்காக எதையும் அவர் கேட்டதே கிடையாது. அவரின் தொகுதிக்கு என்ன தேவை, தொகுதிக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று என்னிடம் கேட்டு, நிறையவே உங்களுக்குச் செய்து இருக்கிறார். சட்டமன்றத்திலும் சிறப்பாக செயல்படக்கூடிய உறுப்பினர்.

இதில் எனக்கு என்ன பெருமை என்றால், இன்றைக்கு கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று, இன்று 6 வருடம் முடிந்து, 7வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறேன். இந்த 6 வருடத்தில் என் பணிகளை, என்னால் முடிந்த அளவிற்குச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறேன் என்றால், அது உங்களின் மாவட்டப் பொறுப்பாளர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள், உங்களின் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எபினேசர் போன்ற நல்ல தளகர்த்தாக்கள் என்னுடன் இருப்பதால் தான். எனவே, வடசென்னையில் இவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், எபினேசகர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம்ஸ் மூர்த்தி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**இந்தியாவில் முதன்முறை**

இந்தியாவிலேயே முதன்முதலில் மகளிர் சுயஉதவிக்குழுவை ஆரம்பித்தது தமிழ்நாடுதான். அதை ஆரம்பித்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு இந்தியா முழுவதும் சுயஉதவிக் குழுக்கள் இருக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் முதன்முறையாக ஆரம்பித்தார். அதன்பிறகு, அப்போது அமைச்சராக இருந்த நம் கழகத் தலைவர், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மணிகள் நின்று கொண்டே உங்களுக்கான கடன் தொகையை எல்லாம் கொடுத்து இருக்கிறார்.

**அடையாள அட்டை**

இப்போது அந்தத் துறைக்கு நான் அமைச்சராக வந்து ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று உங்களை எல்லாம் சந்தித்து, உங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் செய்துகொண்டு இருக்கிறோம். சென்ற மகளிர் தினத்தன்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுகூட சுய உதவிக் குழுக்களின் கோரிக்கைதான். நகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொருட்களை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்குத் தனியாகக் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்று சொன்னவுடன், தலைமைச் செயலாளரை அழைத்து, வெகுவிரைவில் உங்களுக்கு எல்லாம் ஒரு அடையாள அட்டைக் கொடுக்கப் போகிறார்கள். அந்த அடையாள அட்டையை வைத்துக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு லக்கேஜ்ஜை அரசுப் பேருந்துகளில் எடுத்துச் செல்லலாம் என்று முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பார்த்து, பார்த்துச் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்றால், உங்கள் மீது இருக்கின்ற நம்பிக்கையில்தான். அரசு எப்படி உங்களுக்குத் துணை நிற்கிறதோ, நீங்கள் இந்த அரசிற்கு துணை நிற்பீர்கள் என்று நம்புகிறேன்.

தலைவர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும், குறிப்பாக மகளிருக்கும், மாணவிகளுக்கும் பார்த்து பார்த்து செய்துகொண்டு இருக்கிறார். அதற்கு ஒரேயொரு உதாரணம் மட்டும் சொல்கிறேன். நம் முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவர் போட்ட முதல் கையெழுத்தே உங்களுக்கான கையெழுத்துதான். அதுதான் மகளிருக்கான விடியல் பயணம் திட்டம்.

**கடமை பொறுப்பு**

இந்த நான்கு வருடங்களில் 730 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறீர்கள். அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி. இப்படிப் பல்வேறு திட்டங்களைப் பார்த்து பார்த்துச் செய்கின்ற நம் திராவிட மாடல் அரசிற்கும், நம் முதலமைச்சர் அவர்களுக்கும் நீங்கள் அனைவரும் பக்கபலமாக, துணையாக இருந்து, அடுத்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் நம் தலைவர் அவர்களைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்த வேண்டிய கடமை, பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்பதை உரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன். மிக அருமையாக அமைந்திருக்கிறது ஆர்.கே.நகர் அச்சீவர்ஸ் அகாடமி. உள்ளே இருக்கின்ற வசதிகளை எல்லாம் பார்க்கும்போது, என் தொகுதியில் இன்னும் நன்றாகச் செய்ய வேண்டும் என்று ஆசை ஏற்படுகிறது. எனவே, இந்தப் பயிற்சி மையம் உங்களுக்குப் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

சென்னை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் ஜோயல், சட்டமன்ற உறுப்பினர்கள் எபினேசர், ஐட்ரிம்ஸ் மூர்த்தி, வெற்றிவீரன், வழக்கறிஞர்கள் அணி மாநில துணைச் செயலாளர் மருது கணேஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜெபதாஸ் பாண்டியன், லட்சுமணன், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி கணேஷ், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர், லோகேஷ், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பொன் இளவரசன், ரவிக்குமார், கௌதமன், லயோலா மதன், கட்பீஸ் சோமு, கழகத்தின் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வட்டக் கழகச் செயலாளர் தேவன், மாமன்ற உறுப்பினர் விமலா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்யநாராயணன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், ஹரிக்குமார் உள்பட ஏராளமான கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

---

## கரூர் மாவட்டத்திற்கு துணை முதல்வர் 9ஆம் தேதி வருகிறார்!

# கரூர் - திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையம் திறப்பு!

### மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர், ஜூலை 7 -

கரூரில் வரும் 9ம் தேதி நடைபெறும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், பூத் கமிட்டி நிர்வாகி கள் கூட்டத்தில் இளைஞரணி செயலாளரும், துணை முதலமைசருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார். என கரூர் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி நேற்று கரூர் திருமா நிலையூரில் புதிய பேருந்து நிலையத்தை பார்வையிட்டார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். எம்எல்ஏக்கள் ஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், டிஆர்ஓ ம.கண்ணன், ஆணையர் சுதா, கரூர் ஆர்டிஓ முகமது பைசல் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் ராயனூர் தளபதி திடலில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளதை முன்னிட்டு வி.செந்தில் பாலாஜி இடத்தை பார்வையிட்டார்.

அதன் பிறகு செய்தியாளருக்கு பேட்டியளித்தார். அவர் கூறியதாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டம் தோறும் நலத் திட்ட பணிகளை தொடங்கி வைத்தும் ஆய்வு செய்தும் வருகின்றார்கள். அந்த வகையில் வருகிற 9ம் தேதி காலை 10 மணிக்கு கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துறை சார்ந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகின்றது. அந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார்கள் .



அதன் பின்னர் காலை 9:15 மணிக்கு கரூர் பிரேம் மஹாலில் இளைஞர் அணி மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரை யாற்றுகிறார்கள். மாலை 4.30 மணியளவில் கரூர் திருமா நிலையூர்

புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்தும், புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும் விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைத்தும், அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். மாலை 5.30 மணிக்கு ராயனூர் தளபதி திடலில் நடைபெற இருக்கின்ற கரூர் மாவட்ட நான்கு சட்டமன்ற தொகுதிகள் சேர்ந்த பூத் கமிட்டியினர், நிர்வாகிகள் உள்ளடக்கிய டிஜிட்டல் பூத் ஏஜென்டுகள், இளைஞர் அணி, மகளிர் அணி என 16ஆயிரம் நிர்வாகிகள் உள்ளடக்கிய பிரம்மாண்ட கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றார்கள். மிகச் சிறப்போடும் எழுச்சியோடும் விழா பேருரை ஆற்ற இருக்கின்றார்கள். வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற வகையில், இந்த கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற இருக்கின்றது. மாபெரும் வெற்றியை கழகத்தினுடைய தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கரங்களில் ஒப்படைக்க கூடிய அளவிற்கு, திருப்பு முனைக் கூட்டமாக அமைய இருக்கிறது. கூட்டம் நிறைவு பெற்றதும் 16000 நிர்வாகி களுக்கு அசைவ விருந்து அளிக்கப் பட இருக்கின்றது. அதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் ஏற்கனவே அடைந்ததை விட மாபெரும் வெற்றியை பெருகின்ற அளவிற்கு திருப்புமுனை கூட்டமாக அமைய இருக்கிறது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்ப்பு முன்னெடுப்பில் உறுப்பினர் சேர்க்கை கரூர் மாவட்டத்தில் 1055 வாக்குச்சாவடிகளிலும், 82 ஆயிரம் புதிய உறுப்பினர்கள் கழகத்தில் இணைந்துள்ளனர். இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக, அனைத்து மாவட்டங்களையும் விட கரூர் மாவட்டம் முன்னணியில் இருக்கின்ற வகையில், பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து வாக்குச்சாவடி பகுதிகளும் வீடு வீடாக சென்று ஒன்றிய அரசு செய்துவரும் துரோகங்களையும், கழக அரசு செய்த சாதனைகள், சாதனை திட்டங்களை விளக்கி கூறியும், சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

தங்களது ஆட்சியில் ஒரு திட்டத்தை கூட உருப்படியாக நிறைவு செய்ய முடியாமல் தொடர்ந்து அவதூறு பரப்பி கொண்டு வருகின்றனர்.

நெரூர் உண்ணியூர் பாலம் 10 ஆண்டுகளாக கிடப்பில் இருந்தது. கடந்த ஆட்சியில் நிறைவேற்றவில்லை. புதிய பேருந்து நிலையம் கொண்டு வரவில்லை. அதற்கு தடையும் போட்டார்கள். புதிய வேளாண்மை கல்லூரி, தரகம்பட்டி கல்லூரிக்கு புதிய கட்டிடம், சிப்காட், சிட்கோ என எண்ணற்ற திட்டங்களை தமிழக முதல்வர் அவர்களிடம் கேட்டுப் பெற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாதவர்கள் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கலெக்டரிடம் போய் ஒரு மனு கொடுப்பது, அதை செய்தியாக கொடுப்பது செய்தி வரவில்லை என்றால் செய்தி போட சொல்லி கேட்பது. இது தான் அவரது வேலை. அவர்கள் ஆட்சியில் நிறைவு பெற்ற திட்டங்களை கூற முடியாததால் இதுபோன்று திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள். 2026 சட்டமன்றத் தேர்தலில் கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் முன்பு பெற்றதை விட மாபெரும் வெற்றி பெறுவோம் இது உறுதி. உறுப்பினர் சேர்க்கை, அரசு நலத் திட்ட பணிகளை நிறைவேற்றுவது என நமக்கு நிறைய வேலைகள் இருக்கிறது. அந்த பணிகளை கவனிப்போம். வேலையில்லாதவர்கள் எதையாவது செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி கவலை இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் தெற்கு மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி மணம்பூண்டி ஒன்றியம் அந்திலி ஊராட்சியில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. மண், மொழி, மானம் காக்க இணைவோம் ஓரணியில்_ தமிழ்நாடு என்ற புதிய உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றிய செயலாளர்கள் ஆ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் ஆர்.கோபிகிருஷ்ணன், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஸ்வரன், மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இரா.கிருஷ்ணாராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BDA, கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து தாண்டவ சமுத்திரம் கிராமத்திற்கு மினி பேருந்து சேவையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.